**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20–ஆம் நாள் வியாழன்கிழமை**
**I.A.02/2026 in O.S.14/2026**

ஆரோக்கியமேரி ... மனுதாரர்/வாதி

//எதிர்//

டோமினிக் ஜெயக்குமார் ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 07.08.2026 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. ஜெய்சங்கர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. சந்திரபோஸ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

1. இம்மனுவானது மனு / தாவா சொத்தில் மனுதாரரின் நிம்மதியான அனுபவத்தினை எதிர்மனுதாரர்களோ / பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்வகையிலும் இடையூரோ, இடைஞ்சலோ செய்யாமல் இருக்கம் வண்ணம் தடைசெய்து எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும் தாவா முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரமமும் வழங்கிட வேண்டி சிபிசி ஆர்டர் 39 ரூல் 1 & 2 மற்றும் பிரிவு 151 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனு / தாவா சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும், மனு / தாவா சொத்தை கடந்த 04.12.2009 ல் குழந்தைதெரசு வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றார் என்றும், தாவா சொத்து மேற்படி கிரைய பத்திரத்தில் 5 வது இன சொத்தாக உள்ளது என்றும், மேற்படி கிரைய பத்திரம் ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2779/2009 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், கிரையப் பத்திரப்படி தாவா சொத்தை அடைந்த மனுதாரர் தன்னுடைய பெயரில் உட்பிரிவு செய்து தனிப்பட்டா பட்டா எண்.2426 பெற்று தாவா சொத்தில் வேண்டும் பயிர் செய்து

யாருடைய இடையூறும் அத்துமீறலும் இன்றி சகல வித உரிமைகளுடன் ஆண்டு அனுபவம் செய்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு உறவினர் இல்லை என்றும், எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தின் தென்புறத்தில் சொத்து உள்ளது என்றும், தாவா சொத்து தற்காலம் மதிப்பு உயர்ந்துள்ள நிலையில் எதிர்மனுதாரர் தாவா அட்டவணை சொத்தை மனுதாரரிடம் கிரையம் கேட்டார் அதற்கு மனுதாரர் கிரையம் கொடுக்க முடியாது தனக்கு வேண்டும் என்று கூறினார் என்றும், அதற்கு எதிர்மனுதாரர் வலுக்கட்டாயமாக கிரையம் கேட்டு அடிக்கடி தொல்லை கொடுத்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் அனுதினமும் பலவேறு நபர்களை அழைத்து வந்து மனுதாரரை மிரட்டி வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துடன் தாவா சொத்தையும் சேர்த்து ஏர்ஓட்ட முயற்சி செய்து வருகிறார் என்றும், மனுதாரர் பெண் என்பதால் பலவகையில் தொந்தரவு கொடுத்தால் எப்படியும் சொத்தை கிரையம் கொடுத்துவிடுவார் என்ற எண்ணத்தில் எதிர்மனுதாரர் செயல்பட்டு வருகிறார் என்றும், இந்நிலையில் கடந்த 01.02.2026 அன்று எதிர்மனுதாரர் பிரச்சனை செய்து தாவா சொத்தினுள் அத்துமீறி உள்ளே நுழைந்து பிரச்ச்னை செய்ய முயற்சித்தார் அதனை மிகுந்த சிரமத்திற்கிடையே மனுதாரர் தடுத்து நிறுத்திவிட்டார் என்றும், தாவா அட்டவணை சொத்தில் எவ்வித உரிமையோ அனுபவமோ எதிர்மனுதாரருக்கு எந்த காலத்திலேயும் இருந்ததில்லை என்றும், மனுதாரர் மிகவும் ஏழ்மையர் பெண், படித்த பட்டதாரி ஆசிரியர், சட்டததை மதிக்கக்கூடியவர் எதிர்மனுதாரர் பணபலம் மிக்கவர், அடியாட்பலம் கொண்டவர், சட்டத்தை மதிக்காதவர் தான் நினைத்ததை எப்படியும் அடைந்துவிடும் எண்ணம் கொண்டவர் என்றும், ஆகையால் மனு / தாவா சொத்தில் மனுதாரரின் நிம்மதியான அனுபவத்தினை எதிர்மனுதாரர்களோ / பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்வகையிலும் இடையூரோ, இடைஞ்சலோ செய்யாமல் இருக்கம் வண்ணம் தடைசெய்து எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு மீதான விசாரணை முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமும் தாவா முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரமமும் வழங்க உத்தரவாக வேண்டும் என்று மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:</u>

3. மனுதாரரின் மனு சரியல்ல என்றும், எதிர்மனுதாரர் மனுதாரரின் சொத்தை கிரையம் கேட்கவும் இல்லை, மிரட்டவும் இல்லை, ஏர்உழ முயற்சி செய்யவும், அத்துமீறி பிரவேசிக்கவோ, பிரச்சனை செய்தது இல்லை என்றும், மனுதாரர் சொத்தை

அடைய வேண்டும் என்ற எண்ணம் எதிர்மனுதாரருக்கு எக்காலத்திலும் இல்லை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள சொத்து விவரம் சரியல்ல என்றும், வியாஜ்ஜிய மூலம் சரியல்ல என்றும், நான்கெல்லை விவரம் தவறு என்றும், மனுதாரரின் தாவா சொத்திற்கு தென்புறம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்து உள்ளது என்றும், அந்த சொத்துக்களை எதிர்மனுதாரர் கடந்த 21.01.2026ம் தேதி அதன் முந்தை உரிமையாளரான அந்துவான்சேவியர் செல்வராஜ் என்பவரிடமிருந்து சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்ற சொத்திற்கு பட்டாவும், ரெவன்யூ ஆதிகாரிகள் மூலம் பெற்றுள்ளார் என்றம், எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்துக்களின் சர்வே நம்பர்கள் 56/1 இ 56/3 இரண்டு சர்வே எண்களுக்கும் 5008 என்ற எண்ணில் பட்டா பெற்றுள்ளார் என்றும், சர்வே எண்.56/2 கூட்டுப்பட்டாவில் உள்ளது என்றும், எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற நபரிடம் ஏற்கனவே மனுதாரர், எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தை ஈன விலைக்கு கிரையம் கேட்டதால் அவர்கள் கொடுக்காமல் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்ததால் கோபம் கொண்டு எதிர்மனுதாரரின் சொத்தை அபகரித்துக்கொள்ளலாம் என்ற கெட்ட எண்ணத்தில் கடந்த 01.02.2026ம் தேதி எதிர்மனுதாரர் கிரையம் பெற்று அனுபவித்து வந்த நிலையில் மனுதாரரும், அவரது கணவரும் மற்றும் சிலரும் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்து சுமார் 180 அடி ஏர்ஓட்டியும், கீழ்மேலாக 60 அடியும் தென்வடலாக சமார் 3 அடியும் ஆக்கிரமித்தும் ஏர்ஓட்டியும் மற்றும் தாவா சொத்திற்கு தென்புறமும் சேர்த்து எதிர்மனுதாரர் அனுபவத்தில் உள்ள சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்தும், ஏர்ஓட்டியும் மனுதாரரும், அவரது கணவர், சில அடியாட்களுடன் எத்தணித்த போது எதிர்மனுதாரர் மிக சிரமப்பட்டு தடுத்துவிட்டார் என்றும், இது சம்பந்தமாக ஊர்முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசியும், மனுதாரரும், அவரது கணவரும் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், எதிர்மனுதாரர் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தில் மனுதாரருக்கு எவ்வித அனுபவமோ உரிமையோ எக்காலத்திலும் இல்லை என்றும், எதிர்மனுதாரரின் கிரையதாரர் மனுதாரருக்கு கிரையம் கொடுக்காமல் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்ததால் மனுதாரர் அவரது கணவருடன் சேர்ந்து கொண்டு எதிர்மனுதாரரின் சொத்தை அடைய முயற்சி செய்கிறாரே தவிர எதிர்மனுதாரர் எக்காலத்திலும் மனுதாரரின் சொத்தை எவ்விதமான ஆக்கிரமிப்பும், இடையூறோ, இடைஞ்சலோ, ஏர்ஓட்டவோ எக்காலத்திலும் முயற்சி செய்யவில்லை என்றும், வாதி கேட்கும் பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரரின்

மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

**பிரச்சனைக்கான தீர்வு:**

6. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டனர்.

7. இம்மனுவின் மனு / தாவா சொத்தை கடந்த 04.12.2009 ல் குழந்தைதெரசு வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றார் என்றும், கிரையப் பத்திரப்படி தாவா சொத்தை அடைந்த மனுதாரர் தன்னுடைய பெயரில் உட்பிரிவு செய்து தனிப்பட்டா பட்டா எண்.2426 பெற்று தாவா சொத்தில் வேண்டும் பயிர் செய்து யாருடைய இடையூறும் அத்துமீறலும் இன்றி சகல வித உரிமைகளுடன் ஆண்டு அனுபவம் செய்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு உறவினர் இல்லை என்றும், எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தின் தென்புறத்தில் சொத்து உள்ளது என்றும், தாவா சொத்து தற்காலம் மதிப்பு உயர்ந்துள்ள நிலையில் எதிர்மனுதாரர் தாவா அட்டவணை சொத்தை மனுதாரரிடம் கிரையம் கேட்டார் அதற்கு மனுதாரர் கிரையம் கொடுக்க முடியாது தனக்கு வேண்டும் என்று கூறினார் என்றும், அதற்கு எதிர்மனுதாரர் வலுக்கட்டாயமாக கிரையம் கேட்டு அடிக்கடி தொல்லை கொடுத்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் அனுதினமும் பலவேறு நபர்களை அழைத்து வந்து மனுதாரரை மிரட்டி வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துடன் தாவா சொத்தையும் சேர்த்து ஏர்ஓட்ட முயற்சி செய்து வருகிறார் என்றும், மனுதாரர் பெண் என்பதால் பலவகையில் தொந்தரவு கொடுத்தால் எப்படியும் சொத்தை கிரையம் கொடுத்துவிடுவார் என்ற எண்ணத்தில் எதிர்மனுதாரர் செயல்பட்டு வருகிறார் என்றும், இந்நிலையில் கடந்த 01.02.2026 அன்று எதிர்மனுதாரர் பிரச்சனை செய்து தாவா சொத்தினுள் அத்துமீறி உள்ளே நுழைந்து பிரச்சனை செய்ய முயற்சித்தார் அதனை மிகுந்த சிரமத்திற்கிடையே மனுதாரர் தடுத்து நிறுத்திவிட்டார் என்றும், தாவா அட்டவணை சொத்தில் எவ்வித உரிமையோ அனுபவமோ

எதிர்மனுதாரருக்கு எந்த காலத்திலேயும் இருந்ததில்லை என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

8. அதனை மறுத்து எதிர்மனுதாரர் மனுதாரரின் சொத்தை கிரையம் கேட்கவும் இல்லை, மிரட்டவும் இல்லை, ஏர்உழ முயற்சி செய்யவும், அத்துமீறி பிரவேசிக்கவோ, பிரச்சனை செய்தது இல்லை என்றும், மனுதாரர் சொத்தை அடைய வேண்டும் என்ற எண்ணம் எதிர்மனுதாரருக்கு எக்காலத்திலும் இல்லை என்றும், மனுதாரரின் தாவா சொத்திற்கு தென்புறம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்து உள்ளது என்றும், அந்த சொத்துக்களை எதிர்மனுதாரர் கடந்த 21.01.2026ம் தேதி அதன் முந்தை உரிமையாளரான அந்துவான்சேவியர் செல்வராஜ் என்பவரிடமிருந்து சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்ற சொத்திற்கு பட்டாவும், ரெவன்யூ ஆதிகாரிகள் மூலம் பெற்றுள்ளார் என்றும், எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்துக்களின் சர்வே நம்பர்கள் 56/1 இ 56/3 இரண்டு சர்வே எண்களுக்கும் 5008 என்ற எண்ணில் பட்டா பெற்றுள்ளார் என்றும், சர்வே எண்.56/2 கூட்டுப்பட்டாவில் உள்ளது என்றும், எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற நபரிடம் ஏற்கனவே மனுதாரர், எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தை ஈன விலைக்கு கிரையம் கேட்டதால் அவர்கள் கொடுக்காமல் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்ததால் கோபம் கொண்டு எதிர்மனுதாரரின் சொத்தை அபகரித்துக்கொள்ளலாம் என்ற கெட்ட எண்ணத்தில் கடந்த 01.02.2026ம் தேதி எதிர்மனுதாரர் கிரையம் பெற்று அனுபவித்து வந்த நிலையில் மனுதாரரும், அவரது கணவரும் மற்றும் சிலரும் எதிர்மனுதாரர் அனுபவத்தில் உள்ள சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்தும், ஏர்ஓட்டியும் மனுதாரரும், அவரது கணவர், சில அடியாட்களுடன் எத்தணித்த போது எதிர்மனுதாரர் மிக சிரமப்பட்டு தடுத்துவிட்டார் என்றும், இது சம்பந்தமாக ஊர்முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசியும், மனுதாரரும், அவரது கணவரும் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், எதிர்மனுதாரர் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தில் மனுதாரருக்கு எவ்வித அனுபவமோ உரிமையோ எக்காலத்திலும் இல்லை என்றும், மனுதாரர் கேட்கும் பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

9. அசல் வழக்கானது மனு சொத்து / தாவா சொத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் தாக்கல் செய்துள்ள நிலையில் இடைக்கால

உறுத்தக்கட்டளை வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவின் சங்கதிகளை மெய்பிக்கும் விதமாக யாதொரு சாட்சிய சான்றாவணமும் மனுதாரர் தரப்பில் முன்வைக்கப்படவில்லை.

10. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டுள்ளது. மனு அபிடவிட் எதிர் வழக்குரை ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவில் எந்தவித வாய்மொழி சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை, ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டு விசாரிக்கப் படவில்லை, வாய்மொழி சாட்சியம் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தால்தான் மனுவில் மனுதாரர் கோரிய பரிகாரம் தீர்வு காணமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு சாட்சியங்கள் ஏதும் முன்னிறுத்தாததாலும், ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படாததாலும் இம்மனுவை அனுமதிக்கத்தக்க போதிய முகாந்திரம் இல்லை என்றும், முதல் தோற்ற வழக்கும் சமச்சீர் நிலையும் மனுதாரருக்கு ஆதரவாக இல்லை என்றும், எவ்வகையில் தனக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் மனுதாரர் தரப்பில் மெய்ப்பிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு எந்த சாட்சியங்களும், ஆவணங்களும் குறியீடு செய்யப்படாததால் இம்மனுவை அனுமதிக்கத்தக்க போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவினை செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10. **முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :**

– இல்லை –

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.